முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**எம்.சி.ஓ.பி. 246/2023**

**நாள்.24.04.2026**

ம.சா.1 திரு. பூமிநாதன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்து போன நபர் என் மகன் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் எனது மருமகள். 3ம் எதிர்மனுதாரர் இறந்துபோன என் மகனின் மகன். என் மகன் மலைச்சாமி திருமணமாகி தனியே வாழ்ந்து வந்தாரா என்றால் தனிக்குடித்தனம் சென்றாலும், செலவுக்கு எங்களுக்கு பணம் கொடுத்து வந்தார். இந்த இழப்பீட்டுத்தொகையில் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து இராமநாதபுரம் அண்ணாசிலையில் இருந்து புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் நடந்தது என்றால் சரிதான். அந்த சாலையில் அதிக மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றாலும், வாகன போக்குவரத்தும் அதிகமாக இருக்கும் என்றால் சரியல்ல, மிதமாகத்தான் இருக்கும். அண்ணா சாலையில் இருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு வர வேண்டும் என்றால், வலைவான சாலையில் மெதுவாகத்தான் வரமுடியும் என்றும், அதனால் பேருந்து ஓட்டுநர் முறையாக மெதுவாகத்தான் பேருந்தை ஓட்டிவந்தார் என்று சொல்வதும் சரியல்ல. என் மகன் சாலை விதிமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் பின்னால் வரும் பேருந்தை கவனிக்காமல் ஆட்டோவை Reverse எடுத்து, அரசு பேருந்தில் மோதி விபத்தை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.24 15:57:44 +0530

ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் என் மகனின் கவனக்குறைவுதான் என்றால் சரியல்ல. விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் காரணம் இல்லை என்பதால், 1ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடுத்தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.24 15:57:47 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .